வேலூர் தொகுதியில்

ஒன்றிய அரசின் மின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் என்ன?

மக்களவையில் - டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி !

புதுடெல்லி, மார்ச் 26 -

தமிழ் நாட்டின் கோடைக் கால அதிக மின் தேவையைப் பூர்த்தி செய்யவும், வரவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் காலத்தில் தடையில்லா மின் விநியோகத்தை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பான அவரது கேள்விகள் வருமாறு:

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் (TNPDCL) கொள்முதல் இடமாற்று ஒப்பந்தங்கள் மற்றும் (Transmission) மின் பகிர்மான மேம்படுத்தல்களை முடுக்கிவிடவும், தமிழ் நாட்டின் அதிக மின் தேவையைப் பூர்த்தி செய்யவும், வரவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் காலத்தில் தடையில்லா மின் விநியோகத்தை உறுதி செய்யவும் 1500 மெகாவாட் (1500 MW) மின்சாரம் வழங்குமாறு ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா?

மத்திய மின்சார ஆணையம் (CEA) ஆதாரப் போதுமான அளவுத் திட்டம் தமிழகத்தின் உச்ச மின் தேவை 24,000 மெகாவாட்டை எட்டக்கூடும் என்றும், ஏப்ரல் 2026க்குள் அதிகபட்ச தினசரி நுகர்வு அறுநூறு மில்லியன் யூனிட்களைத் தாண்டலாம் என்றும் மதிப்பிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

பிற மாநிலங்களில் அமைந்துள்ள மத்திய மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து தமிழகத்திற்குக் கோரப்பட்ட மின்சாரத்தை வழங்குவதற்கு ஒன்றிய அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

தமிழ்நாட்டில் குறிப்பாக வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட மின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் பட்டியல் தருக?

அதற்கு ஒன்றிய அரசின் மின்சக்தி அமைச்சகத்தின் இராஜாங்க அமைச்சர் ஸ்ரீபாத் யேசோ நாயக் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

2024-25 வரையிலான காலக்கட்டத்தில் மத்திய மின்சார ஆணையத்துடன் (CEA) கலந்தாலோசித்து தமிழ்நாடு மாநிலத்தால் தயாரிக்கப்பட்ட 'வளப் போதுமான அளவு திட்டப் (RAP)' படி, 2026-27 நிதியாண்டில் அதிகபட்சத் தேவை மற்றும் வருடாந்திர மின் ஆற்றல் நுகர்வு முறையே 23,314 MW ஆகவும், 72,662 MW ஆகவும் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

உச்ச கோடைகால தேவையை பூர்த்தி செய்ய, TNEB லிமிடெட் பின்வரும் பல முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

(i)தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் (TNPDCL) ஐந்தாண்டு காலத்திற்கு சுமார் 2,700 மெகாவாட் மற்றும் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சுமார் 3,500 மெகாவாட்களுக்கு குறுகிய கால மின் சக்தி கொள்முதல் ஏற்பாடுகளை கோடைக் கால தேவையை பூர்த்தி செய்வதற்காக நடுத்தர கால மின் கொள்முதல் ஏற்பாடுகளை முடித்துள்ளது.

(ii) 01.03.2026 முதல் 15.04.2026 வரையிலான காலகட்டத்தில், TNPDCL, உத்தரப் பிரதேச பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் (UPPCL) உடன் 500 மெகாவாட்டிற்கான மின் பரிவர்த்தனைகள் தொடர்பான ஏற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

(iii) சமீபத்தில், தமிழ்நாட்டில் 800 மெகாவாட் நிலக்கரி அடிப்படையிலான வடசென்னை அனல் மின் நிலையம் நிலைII (800 மெகாவாட்) 24.01.2026 அன்று. வணிகச் செயல்பாட்டுக்கு சேர்க்கப்பட்டது.

நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் மாநிலம் ஏற்கனவே அதன் நீர் வளங்களை மேம்படுத்தியுள்ளது, இதனால் அதிக தேவை உள்ள கோடை மாதங்களில் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் முழு கொள்ளளவு நீர் கிடைக்கும்.

(iv) மாநிலம் 2025-26 நிதியாண்டில் மொத்தம் 1,924 MVA புதிய துணை மின்நிலைய உருமாற்ற திறன், 1,606 MVA கூடுதல் மாற்றும் திறன் தற்போதைய துணை மின்நிலையங்கள் மற்றும் 452 கிமீ மின் பகிர்மான கம்பி இணைப்புகளை (Transmission Lines) 2025-26 நிதியாண்டில் சேர்த்துள்ளது.

மேலும், கூடுதலாக 1500 மெகாவாட் மின்சாரம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது. அதைத் தொடர்ந்து, மின்சார அமைச்சகம் (MoP) 329.36 மெகாவாட் உறுதியான மின் சாரத்தை ஃபராக்கா சூப்பர் அனல் மின் நிலையத்திலிருந்து (நிலை I & II) நவம்பர், 2025 இல் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது, இது மாநிலத்தில் தடையில்லா மின்சாரத்தை உறுதி செய்யும் நோக்கில் 31.05.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மாநில/ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட மின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன;

(i)தலைமுறை:தமிழ்நாட்டில் 5,140 மெகாவாட் திறன் கொண்ட நான்கு அனல் மின் திட்டங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(ii) பரிமாற்றம்:தற்போது தமிழகத்தில் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் (RE)/ புதைபடிவமற்ற உற்பத்தி மற்றும் கட்டத்தை வலுப்படுத்த ஐந்து மாநிலங்களுக்கு இடையேயான பரிமாற்ற அமைப்பு (ISTS) திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன, அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

நிதி ரீதியாக நிலையான மற்றும் செயல்பாட்டுத் திறனுள்ள விநியோகத் துறையின் மூலம் நுகர்வோருக்கு மின்சார விநியோகத்தின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன், இந்திய ஒன்றிய ஜூலை 2021 இல் 'புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறைத் திட்டத்தை' (RDSS) அறிமுகப்படுத்தியது. RDSS இன் முக்கிய நோக்கம் 'ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக ரீதியாக' ஒட்டுமொத்த இழப்பைக் குறைப்பதாகும்.

1215% மற்றும் 'சராசரி சப்ளை செலவு' (ACS) மற்றும் 'சராசரி வருவாய் உணரப்பட்டது' (ARR) இடையே உள்ள இடைவெளி பூஜ்ஜியத்திற்கு. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு உட்பட நாட்டில் விநியோக உள்கட்டமைப்பு மற்றும் ஸ்மார்ட் மீட்டர் வேலைகளை மேம்படுத்தவும், விநியோக வலையமைப்பின் செயல்திறனை அதிகரிக்கவும், அமைப்பில் ஏற்படும் இழப்பைக் குறைக்கவும் தகுதியுள்ள விநியோகப் பயன்பாட்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

நாட்டில் ஆர்.டி.எஸ்.எஸ் திட்டத்தின் கீழ், ரூ.1.53 லட்சம் கோடியில் விநியோக உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் ரூ.1.31 லட்சம் கோடியில் ஸ்மார்ட் மீட்டர் பணிகள் நாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ், வேலூர் நாடாளுமன்றத் தொகுதி உட்பட தமிழகத்திற்கு ஸ்மார்ட் மீட்டர் திட்டங்களுக்கு ரூ.19,235 கோடியும், விநியோக உள்கட்டமைப்புப் பணிகளுக்கு ரூ.9,568 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆர்.டி.எஸ்.எஸ்ன் கீழ் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் ரூ.776 கோடி மதிப்பிலான மின் பகிர்மான உள்கட்டமைப்புப் பணிகள் பின்வருமாறு அனுமதிக்கப்பட்டுள்ளன.

(A) அக்ரிகல்ச்சர் ஃபீடர் பிரிப்பு (AFS): 54 ஃபீடர்களின் எண்ணிக்கை, (B) உயர் மின்னழுத்த விநியோக அமைப்பு (HVDS): 10 ஃபீடர்களின் எண்ணிக்கை, இரட்டை விநியோக மின் மாற்றி பிரித்தல்: 04 ஊட்டிகளின் எண்ணிக்கை, (C) டிஸ்ட்ரிபியூஷன் டிரான்ஸ்ஃபார்மர்களுக்கான துணை கேபிள் (டிடி): 9058 டிடிகள், (D) ஸ்மார்ட் மீட்டர்கள்: 8,00,606 நுகர்வோர், 9058 டிடிகள் மற்றும் 213 ஃபீடர்கள்.

தமிழகத்தில் கட்டப்பட்டு வரும் அனல் மின் திட்டங்களின் விவரம்:

1.கூடங்குளம் அணுமின் நிலையம் (KKNPP) 1,000 + 1,000 = 2000MW, 2. பாரதிய நபிகியா வித்யுத் நிகாம் லிமிடெட் (பாவினி) 500MW, 3. உடன்குடி சூப்பர் அனல் மின் நிலையம் (நிலைI)660 MW, 4. எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலம்(SEZ) 660 MW என மொத்தம் 5,140 மெகாவாட் மின் சாரம் தயாரிக்கும் திட்டம்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்

துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 56 'அ' வட்டம் பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த 56வது வட்டத் தலைவர் கு.சரத், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார். வட்டக் கழகச் செயலாளர் ம.பரத்குமார் உடன் உள்ளார்.

ஒரு நபருக்கு 135 லிட்டர் குடிநீர் !

30 ஆண்டுகள் தண்ணீர் தேவையை தீர்க்கும் வகையில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்!

முதலமைச்சருக்கு ஒட்டன்சத்திரம் பொதுமக்கள் நன்றி !

ஒட்டன்சத்திரம், மார்ச் 26-

"நீர்இன்றி அமையாது உலகெனில் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு" என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப நீர் இவ்வுலகிற்கு முக்கியத்துவமாக உள்ளது. பூமியில் மனிதர்கள் உயிர் வாழவும், அவன் அன்றாட பயன்பாடுகளுக்கும், விவசாய நடவடிக்கைகளுக்கும், எல்லா வகையான உணவு உற்பத்திகளுக்கும் நீரே ஆதாரம். நீரிலை இல்லை என்றால் மனிதன் வாழவே இயலாது என்ற மக்களின் தேவையை அறிந்து ஒட்டன்சத்திரம் தொகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை சார்பில் அனைத்து வீடுகளுக்கும் கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் உயிர்நீர் இயக்கம் மூலம் குடிநீர் வழங்கல் துறை சார்பில் கடந்த 14.12.2022ஆம் தேதியன்று காவிரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு, கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதன்படி திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சி, நெய்க்காரபட்டி, கீரனூர் பேரூராட்சி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, பழனி ஊராட்சி ஒன்றியம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 506 ஊரக உட்கடை கிராமங்களுக்கு கடந்த 16.12.2022ஆம் தேதி குடிநீர் திட்டப்பணிகளை துவக்க ரூ 930 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அரசாணை வெளியிடப்பட்டு, கடந்த 28.05.2023ஆம் தேதி இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இதன்படி காவிரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு நஞ்சை புக;ர் தடுப்பணையில் இரண்டு நீர்உந்து நிலையம், 57 தரை மட்ட தொட்டி, மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் உயர்மட்ட நீர் தேக்க தொட்டி 178 ஆகியவற்றின் மூலம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்கு 10.14 எம்.எல்.டி, தொப்பம்பட்டி ஒன்றியத்திற்கு 11.58 எம்.எல்.டி, பழனி ஒன்றியத்திற்கு 9.20 எம்.எல்.டி, ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு 6.44 எம்.எல்.டி, கீரனூர் பேரூராட்சிக்கு ரூ.25.55 எம்.எல்.டி, நெய்க்காரப்பட்டி பேரூராட்சிக்கு ரூ.1.69 எம்.எல்.டியும் இதில் சுத்திகரிப்பு 2.08 எம்.எல்.டியும் மொத்தம் 43.69 எம்.எல்.டி குடிநீர் வழங்குவதற்கு திட்டம் தயார் செய்யப்பட்டு, ஊரக பகுதிகளில் 5.12 லட்சம், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 1.36 லட்சம் மொத்தம் 6.48 லட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சின்னக்காம்பட்டி, காளாஞ்சிபட்டி, நவக்கானி, கள்ளிமந்தையம், பொரு;ர், வாகரை, எவிக்சன்நகர், கொழுமங்கொண்டான், கீரனூர், நெய்க்காரபட்டி, அ.கலையம்புத்தூர், சரவணம்பட்டி, இந்திராநகர், உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளில் மேல்நிலை மற்றும் உயர் மட்ட நீர்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்படவுள்ளது.

இந்த புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு ரூ.112.64 கோடியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகர் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, புதிதாக சுற்றுச்சுவருடன் கூடிய 32.80 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி அமைத்து, மேல் நிலை நீர்தேக்க தொட்டி 3 இடங்களில் அமைக்கப்பட்டு, குடிநீர் வினியோகம் செய்ய 92.17 கிலோமீட்டர் குழாய்கள் அமைக்கப்பட்டு, நகராட்சியில் 8617 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது ஒட்டன்சத்திரம் தொகுதியில் குடிநீரை விலை கொடுத்து பொதுமக்கள் வாங்கி பயன்படுத்தி வந்த நிலை இருந்து வந்தது. தற்போது தொகுதி மக்களின் நிலை அறிந்து, இந்த புதிய கூட்டு குடிநீர் திட்டத்திற்கு அனுமதி அளித்த தமிழக முதலமைச்சருக்கும், உறுதுணையாக இருந்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேருவிற்கும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கும், தீவிர முயற்சி எடுத்து, திட்டத்தினை பெற்றுத் தந்த உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணிக்கு தொகுதி மக்கள் சார்பாகவும், விவசாயிகளின் சார்பாகவும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம் என்று பொதுமக்கள் கூறினர்

இது குறித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி கூறியதாவது:-

ஒட்டன்சத்திரம் தொகுதியில் கடந்த கால ஆட்சியில் பொதுமக்கள் குடம் ரூ.10க்கு குடிநீரை விலை கொடுத்து வாங்கி பயன்படுத்தும் நிலை இருந்து வந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி வருகிறார். அதன்படி ஒட்டன்சத்திரம் தொகுதியில் தற்பொழுது தொடங்கப்பட்டுள்ள கூட்டுகுடிநீர் திட்டம் நிறைவடைந்து பயன்பாட்டிற்கு வரும்பொழுது, தனிநபர் ஒன்றுக்கு நகராட்சி பகுதிகளில் 135 லிட்டரும், பேரூராட்சி பகுதிகளுக்கு நபர் ஒன்றுக்கு 90 லிட்டரும், ஊரக பகுதிகளுக்கு நபர் ஒன்றுக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் தொகுதியில் 30 ஆண்டுகளுக்கு குடிநீர் பிரச்சனையே இல்லாத வகையில் தலைமுறைகள் நிலைத்து நிற்கும் கூட்டு குடிநீர் திட்டமாக இத்திட்டம் அமையும் என்றும் மேலும் இதன் முதல் கட்ட பணிகள் முடிவடைந்து கடந்த 13. 2. 2026ம் தேதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அரசியல் விமர்சகர் ரவீந்திரன் துரைசாமி தந்தை

ஸ்ரீ கிருஷ்ணன் மறைவு!

கழகத் தலைவர்- முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 26 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

அரசியல் விமர்சகரும், தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்பவருமான ரவீந்திரன் துரைசாமி அவர்களின் தந்தை ஸ்ரீகிருஷ்ணன் அவர்கள் மறைவெய்தினார் என்ற துயரச் செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அன்புத் தந்தையை இழந்து வாடும் ரவீந்திரன் துரைசாமி அவர்களுக்கு எனது ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

"5G சேவை சிக்கலால் அழைப்புகள் துண்டிப்பு, நெட்வொர்க் நெரிசல் ஏன் தொடர்கிறது?

கிராமங்களில் இன்னும் நெட்வொர்க் கிடைக்காத நிலை ஏன்?

மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 26 -

5G சேவைக்கு மாற்றம் செய்யப்பட்டபின் அழைப்புகள் துண்டிப்பு அதிகரித்ததற்கான துல்லியமான தரவுகளை ஒன்றிய அரசு வெளியிடுமா? கிராமப்புறங்களில் BTS கோபுரங்கள் அமைப்பதில் உள்ள தடைகள் என்ன? அவற்றை நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? என நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என். இராஜேஸ்குமார் ஒன்றிய அமைச்சருக்கு என கேள்வி எழுப்பி உள்ளார்.

மேலும், நாடு முழுவதும் 5G சேவைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டதையடுத்து, பயனாளர்கள் தெரிவித்துள்ள அழைப்புகள் துண்டிப்பு மற்றும் நெட்வொர்க் நெரிசல் அதிகரிப்பு குறித்து அரசு ஆய்வு மேற்கொண்டதா என்று கேள்வி எழுப்பினார்.

மேலும், சேவை தரநிலைகள் (QoS) குறித்து TRAI சமீபத்தில் திருத்தியுள்ள கடுமையான அளவுகோல்கள் என்ன? அவற்றை பின்பற்றத் தவறிய தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கு நடப்பு ஆண்டின் கடந்த இரண்டு காலாண்டுகளில் விதிக்கப்பட்ட அபராத விவரங்கள் என்ன? என்றும் கேட்டார்.

அதேபோல், மொபைல் சேவை கிடைக்காத கிராமங்களுக்கு சேவை வழங்கும் 4G Saturation திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் தற்போது 5G சேவை கிடைக்காத 0.1 சதவீத மாவட்டங்களுக்கு சேவை வழங்கும் காலக்கெடு என்ன என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய தொடர்பு மற்றும் கிராமப்புற மேம்பாட்டு ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர், இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI), தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் (TSPs) சமர்ப்பிக்கும் செயல்திறன் கண்காணிப்பு அறிக்கைகள் (PMR) அடிப்படையில் 5G உட்பட அனைத்து மொபைல் நெட்வொர்க் சேவைகளின் தரத்தை மதிப்பீடு செய்ய சுயாதீன மற்றும் ஆபரேட்டர் உதவியுடன் டிரைவ் டெஸ்ட்களை நடத்தி வருவதாக தெரிவித்தார்.

இத்தேர்வுகளின் முடிவுகள் குறைபாடுகளை சரிசெய்ய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பகிரப்படுகின்றன என்றும் கூறினார்.

02.08.2024 அன்று வெளியிடப்பட்ட TRAI விதிமுறைகளின் அடிப்படையில் QoS அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றை பின்பற்றாத நிறுவனங்களுக்கு நிதி அபராதங்கள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

பார்தி ஏர்டெல், பி.எஸ்.என்.எல்., எம்.டி.என்.எல், ரிலையன்ஸ் ஜியோ, வோடாபோன் ஐடியா ஆகிய நிறுவனங்களுக்கு ஜூலை 25, ஆகஸ்ட் 25, மாதங்களில் அபராதங்கள் விதிக்கப்பட்டதுடன், செப்டம்பர் 25, முதல் நவம்பர் 25, வரை காரணம் காட்ட நோட்டீஸ் வழங்கப்பட்டதாகவும், டிசம்பர் 25 செயல்திறன் அறிக்கை பரிசீலனையில் இருப்பதாகவும் கூறினார்.

மேலும், மொபைல் சேவை இல்லாத கிராமங்களுக்கு அரசு மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் கட்டம் கட்டமாக சேவை வழங்கி வருவதாகவும், 28.02.2026 நிலவரப்படி டிஜிட்டல் பாரத் நிதி 4G Saturation திட்டத்தின் கீழ் 21,328 கிராமங்களுக்கு 4G சேவை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக 14,301 கோபுரங்கள் செயல்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். புதிய அடிப்படை ஒளிபரப்பு பெறுநர் நிலையங்கள் (BTS) அமைப்பது தொழில்நுட்ப மற்றும் வர்த்தக சாத்தியக்கூறுகளைப் பொறுத்தது என்றும் ஒன்றிய அமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் விளக்க மளித்தார்.

மு.க.தமிழரசு – நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – அன்பகம் கலை – நா.எழிலன் பங்கேற்பு!

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, மார்ச்.26-

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்களின் ஆலோசனையின்படி, துணை முதலமைச்சரும் - மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக்கு உட்பட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, வழக்கறிஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நலப்பிரிவு, அயலக அணி, சுற்றுசூழல் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, இலக்கிய அணி, பொறியாளர் அணி, மீனவர் அணி, தொண்டர் அணி, நெசவாளர் அணி, தொழிலாளர் அணி, அமைப்புசாரா தொழிலாளர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தகவல் தொழில்நுட்ப அணி ஆகிய அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதிக் கழக அலுவலகத்தில் இன்று (26.03.2026 - வியாழக்கிழமை) மாலை 6:00 மணி அளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மு.க. தமிழரசு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

எனவே அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக் கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை விடுத்துள்ளார்.

முரசொலி நாளிதழில் நீண்ட காலமாகப் பணியாற்றி வந்த முரசொலி முத்து அவர்கள், உடல் நலக்குறைவால் 24.03.2026 அன்று மாலை இயற்கை எய்தினார், திருவொற்றியூர் தெற்கு மாட வீதியில் உள்ள நாட்டுக்கோட்டை சத்திரத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் உடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் – மாநகராட்சி மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் ஆகியோர் நேற்று (25.4.2026) நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டனர். உடன் திருவொற்றியூர் கிழக்கு பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார், மாவட்டப் பிரதிநிதி ஆர்.டில்லி, சீனி கண்ணன், ஜார்ஜ், சூரி, அந்தோணி மற்றும் கழக தோழர்கள் இருந்தனர்.